# தொடன்கொட பிரதேச சபை
# கழுத்துறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 08 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 நவம்பர் 23 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் தொடன்கொட பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொடன்கொட பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 14,521,951 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,930,415 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,900,751 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,360 | 731 | 5,908 |
| (ii) | வாடகை | 289 | 218 | 227 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 87 | 87 | 119 |
| (iv) | ஏனைய வருமானம் | 3,083 | 3,083 | - |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 7,706,724 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 6,840,080 |

### 2.2.3 நிலுவை வருமானம்

--------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நேபட பொதுச் சந்தையில் 4 கடைகளிலிருந்து நிலுவைக் கடை வாடகை ரூபா 31,335 தொகையும் தொடங்கொட பொதுச் சந்தையில் 07 கடைகளிலிருந்து நிலுவை ரூபா 27,268 தொகையும் 2003 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடைகளில் வாடகையாளர்கள் நீண்ட காலமாக வியாபார நடவடிக்கைகளை நடாத்திக் கொண்டிருந்த போதிலும் வருடாந்தம் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தொடங்கொட வாராந்த சந்தையில் வாடகை அறவிடுதல் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் வாடகைப் பணத்தை சபையில் கட்டும் போது 4 நாட்கள் தொடக்கம் 7 நாட்கள் வரையிலான தாமதமொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 வருமான மதிப்பீடு

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆண்டு வரை மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனவரி வருமானம் ரூபா 2,289,000 ஆக இருந்தது. 2009 ஆம் ஆண்டின் பின்னர் 278 கட்டிட வரைப்படத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 22 கட்டிடங்களுக்காக இணக்கச் சான்றிதழும் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அதற்குரிய ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டு ஆதனவரி திருத்தப்படாமையினால் ஆதனவரி வருமான மதிப்பீடு 2009 ஆம் ஆண்டிலிருந்து வேறுபாடின்றிக் காணப்பட்டது.

(ii) சபையினால் வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளிலிருந்து அறவிடப்படுகின்ற வருடாந்த வாடகையை அடிப்படையாகக் கொள்ளாமல் வருடாந்த சராசரி பெறுவனவுகளின் அடிப்படையில் வாடகை வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 5 - 22 கடைகளின் வாடகைக்காக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் 2010 ஆம் ஆண்டில் மதிப்பீட்டை விட ரூபா 100,000 தொகை குறைவடைந்திருந்தது.

(iii) 8 வருமானத் தலைப்புக்களுக்கான தகவல்கள் கிடைக்காமையினால் 2011 ஆம் ஆண்டின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு 2012 ஆம் ஆண்டிற்காகவும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

(அ) நேர்க்கூலி அடிப்படையின் கீழ் ஹர்மன்வத்த சனசமூக மண்டபத்தின் மலசலகூடத்தை நிர்மாணித்தல் மற்றும் கொஹொலான வடக்கு ஹெட்டிகொட ஜம்புகஸ் சந்தி தொடக்கம் திவென வீதியை அபிவிருத்தி செய்வதற்காக முறையே 2011 நவம்பர் 29 ஆந் திகதி ரூபா 60,000 தொகை மற்றும் 2011 நவம்பர் 28 ஆந் திகதி ரூபா 60,000 தொகை என்பன வேலை அத்தியட்சகரினால் முற்பணம் பெறப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2011 திசெம்பர் 15 வரையிலும் மலசலகூட நிர்மாணம் அனேகமாக பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் வீதியை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம் பதவிநிலை உத்தியோகத்தருக்கு ஒரு தடவையில் வழங்க முடியுமான முற்பணமான ரூபா 20,000 இனை விஞ்சி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) நிதிப் பிரமாணம் 371(2)(இ) இன் பிரகாரம் முன்னர் முற்பணமாகச் செலுத்தப்பட்ட பணம் தீர்க்கப்பட்டதன் பின்னரே அடுத்த முற்பணம் வழங்க முடியுமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக வேலை அத்தியட்சகரினால் 2011 நவம்பர் 28 ஆந் திகதி பெறப்பட்ட ரூபா 60,000 தொகையான முற்பணம் தீர்க்கப்படாதிருந்தும் 2011 நவம்பர் 29 அந் திகதி ரூபா 60,000 தொகையான முற்பணம் மீளவும் பெறப்பட்டிருந்தது.

(iii) நேர்க்கூலி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்கள் மதிப்பீட்டின் பிரகாரம் சபையின் பொருட்கள், ஊழியம் என்பவற்றின் அடிப்படையில் ஈடுபடுத்தப்படுகின்றமையினால் வேலை அத்தியட்சகருக்கு மேற்கூறப்பட்ட பிரகாரம் முற்பணம் செலுத்துதல் அவசியமற்றதாகும்.

(iv) 2011 நவம்பர் 28 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 60,000 தொகையான முற்பணத்திலிருந்து 2011 திசெம்பர் 15 வரையிலும் எவ்வித செலவினமும் செய்யப்பட்டிராததுடன் உரிய வேலைகளை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) செயற்திட்டத்திற்கான மதிப்பீட்டைத் தயாரித்தல், தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்தல், பொருட்கள், ஊழியம் மற்றும் இயந்திர கிரயப்

பகுப்பாய்வு அறிக்கை தயாரித்தல் மற்றும் அவற்றைச் சிபார்சு செய்தல் போன்ற சகல செயற்பாடுகளும் வேலை அத்தியட்சகரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.4 ஒப்பந்த நிருவாகம்

கொங்கிரீட்கல் இட்டு நிர்மாணிக்கப்பட்ட சப்புகஹவத்த தெஹிகஹ உடுமுல்ல வீதி தொடர்பாக 2011 திசெம்பர் 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 295.25 சதுர மீற்றரான வீதியில் இடப்பட்டிருந்த கொங்கிரீட் கற்களுக்கிடையே அதிக இடைவெளி காணப்பட்டமையினால் கல் கழன்றிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் சில கற்கள் உடைந்திருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டது.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.5.1 வினோதக் கண்காட்சி

மீளாய்வாண்டின் போது நேபட விளையாட்டு மைதானத்தை வினோதக் கண்காட்சியை நடாத்துவதற்காக வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கண்காட்சிக்காக விளையாட்டரங்கை 2011 ஒக்தோபர் 01 தொடக்கம் 10 வரை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2011 ஒக்தோபர் 10 ஆந் திகதியின் பின்னர் 2011 ஒக்தோபர் 19 வரை 09 நாட்கள் எந்த அங்கீகாரமுமின்றி விளையாட்டரங்கு கண்காட்சி செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(ii) 2011 ஒக்தோபர் 03 ஆந் திகதிய சபைச் செயலாளரின் கடிதத்தில் கண்காட்சியின் நுழைவுச் சீட்டுக்கள் பரிசோதனை செய்யப்பட்டு தினந்தோறும் அறிக்கையிடும் வகையில் வருமானக் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தும் 19 நாட்கள் நடாத்தப்பட்ட கண்காட்சிக்காக ஒரு நாளின் போது மாத்திரம் அறிக்கை பெறப்பட்டிருந்தது.

### 2.5.2 மின்சார உபகரணங்கள் கொள்வனவு

(i) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி 207 இன் பிரகாரம் களஞ்சிய மற்றும் பொருட்களை வழங்குதல் முடியுமான வரை பொதுப் போட்டிக்கு விடப்பட வேண்டிய போதிலும் சபையினால் 2008 ஆண்டில்

கூறுவிலைகள் கோரப்பட்டு தெரிவு செய்யப்பட்ட இரண்டு நிறுவனங்களிலிருந்து மின்சார உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவ்வாறு மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மின்சார உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,126,220 ஆகும்.

(ii) எந்தவொரு கூறுவிலைகளும் கோரப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 470,550 பெறுமதியான மின்சார உபகரணங்கள் தனியார் நிறுவனமொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(iii) 2008 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு நிறுவனங்கள் அங்கீகரித்த கூறவிலைகளை விட கூடிய விலையின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது 17 சந்தர்ப்பங்களில் மின்சார உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டமையினால் ரூபா 313,233 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.5.3 காணி ஏலவிற்பனைக்கான திட்டத்தை அங்கீகரித்தல்

---

கிராம சேவகர் பிரிவு 800 G ஆம் இலக்கத்திலுள்ள தொடங்கொட கிழக்கு பஹன்வத்த காணியை ஏலத்தில் விற்பனை செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த வரைபடத்திட்டத்தை (திட்ட இல 3040) அங்கீகரித்தல் மற்றும் பொதுச் செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட காணிப் பகுதி தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) காணி வரைபடத்திட்டத்தை அங்கீகரிக்கும் போது 2007 திசெம்பர் 27 ஆந் திகதிய திட்டமிடல் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் காணியின் உள்ளேயுள்ள சகல வீதிகளும் தார் இடப்பட்டு அமைக்கப்பட்டு வீதி மற்றும் மதகுகள் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் கொங்கிரீட் இடவேண்டியிருந்தமை சிபார்சு செய்யப்பட்டிருந்ததுடன் அத்தினமே தலைவரினால் எழுத்துமூலம் இதுதொடர்பாக சொத்து விற்பனை முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. சொத்து விற்பனை முகாமையாளரிடம் இருந்து 2008 சனவரி 04 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வீதிகள் தார் இடுதல் நீக்கப்பட்டு உதவியொன்று பெற்றுத்தருமாறு தலைவரிடம் கோரப்பட்டிருந்ததுடன் தலைவரினால் திட்டமிடல் குழுவின் சிபார்சு கருத்திற் கொள்ளப்படாமல் வீதிக்கு தார் இடுவதற்குப் பதிலாக மோட்டர் கிறேடரினால் அபிவிருத்தி செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டு உரிய ஏல விற்பனைக்காக 2008 சனவரி 14 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) மேற்கூறப்பட்ட காணியின் ஏல விற்பனையினால் பொது செயற்பாடுகளுக்காக 01 றூட், 23.55 பேர்சஸ் கிடைத்திருந்ததுடன் அதில் தற்காலிக குடிசையொன்று காணப்பட்டதுடன் காணியின் ஒரு பகுதியில் வெளித்தரப்பினரால் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தமை 2011 திசெம்பர் 30 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.5.4 வரைபடத்திட்டங்கள் அங்கீகரிக்கப்படாத நிர்மாணங்கள்

---

தொடர்பு இல. பீஏ/2011/56 இன் கீழ் வீட்டு அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக நபர் ஒருவரினால் 2011 யூலை 12 ஆந் திகதி விண்ணப்படிவம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் 2011 ஒக்தோபர் 18 அந் திகதி இது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்ட போது தற்போதும் இந்த வீட்டில் கொங்கிரீட் கல்லால் கட்டப்பட்டு மேல்தட்டு போடப்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இலங்கைக் குடியரசின் 2009 ஏப்ரல் 17 அந் திகதிய நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அமைச்சரின் 1997/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எந்த அபிவிருத்தி அனுமதிப்பத்திரமும் இன்றிய கட்டிட நிர்மாணம் தொடர்பாக மேல்தட்டு போடப்பட்ட பகுதி கூரையாகக் கருதி ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 400 படி தண்டப்பணம் அறவிடவேண்டிய போதிலும் தண்டப்பணம் ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 300 படி கணிப்பீடு செய்யப்பட்டு ரூபா 14,400 தொகையான தண்டப்பணம் விதிக்கப்பட்டமையினால் தண்டப்பம் ரூபா 4,800 இனால் குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும் 2012 ஒக்தோபர் 08 ஆந் திகதி வரையிலும் தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.5.5 சபையின் சொத்துக்கள் முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

---

2011 நவம்பர் 16 மற்றும் 19 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் சபையின் சொத்துக்களில் சட்டரீதியற்ற வகையில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) பஹன்வத்த காணி ஏல விற்பனையில் (120/1997 ஆம் இலக்க காணிக்கூறின் திட்டம்) சபைக்கு கையளிக்கப்பட்ட பொதுக் காணிக் கூறில் பலகைகளினால் செய்யப்பட்ட 14’x11’ அளவான தற்காலிக வீடு மற்றும் கிணறு என்பன நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இந்த வீட்டில் யாரோ ஒருவர் வசித்திருந்தார். கிராமத்தவர்களினால் 2011 யூன் 24 ஆந் திகதி இது தொடர்பாக எழுத்து மூலம் சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2011 திசெம்பர் 19 ஆந் திகதி

வரையிலும் இந்த சட்டரீதியற்ற நிர்மாணங்கள் மற்றும் சட்டரீதியற்ற வசிப்பாளரை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தெபுவன சந்தைக் காணியில் வெளி நபரினால் கராஜ் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் நிர்மாணங்களை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நேபட சந்தியில் தெபுவன வீதிக்கு முன்பக்கமாகக் காணப்பட்ட 12x18 அடி அளவிலான காணித் துண்டில் அருகிலுள்ள கடை உரிமையாளர் சமயலறைப் பொருட்கள் மற்றும் எண்ணெய் பெரல்கள் போன்ற பொருட்களைக் களஞ்சியப்படுத்தியிருந்தார்.

### 2.5.6 ஜேசீபீ இயந்திரத்தை சேவையில் ஈடுபடுத்துதல்

2011 ஆம் ஆண்டின் பொது ஜேசீபீ இயந்திரம் 1355.6 மீற்றர் மணி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அது வாடகை அடிப்படையில் 642.4 மீற்றர் மணியாகவும், சபை வேலைகளுக்காக 713.2 மீற்றர் மணியாகவும் காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையின் வேலைகளுக்காக ஜேசீபீ இயந்திரத்தை ஈடுபடுத்தும் போது ஒவ்வொரு செயற்திட்டத்திற்கான இயந்திர மணித்தியால மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வாடகை அடிப்படையில் இயந்திரம் பெற்றுக்கொள்ளும் போது அனேகமான சந்தர்ப்பங்களில் 2 மீற்றர் மணிக்காக பணம் அறவிடப்பட்டு இயந்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2 மீற்றர் மணியை விஞ்சிய சேவை பெறுதல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் போது மேலதிக மணி எண்ணிக்கைக்கான பண அறவிடுதல் இயந்திரத்தின் சாரதியினுடைய அறிக்கையின் அடிப்படையில் கொள்ளப்பட்டிருந்ததுடன் 2011 செப்தெம்பர் மாதத்தில் மேலதிக மணி எண்ணிக்கைக்காக பணத்தை அறவிடுதல் சேவையைப் பெற்ற திகதி தொடக்கம் 01 நாள் முதல் 15 நாட்கள் வரையான தாமதம் ஏற்பட்டிருந்தது.

(iii) ஜேசிபீ இயந்திரத்தை சேவையில் ஈடுபடுத்தவதற்கு முன் மற்றும் சேவையில் ஈடுபடுத்தியதன் பின் மேற்பார்வை உத்தியோகத்தரினால் அதன் மீற்றர் மணி எண்ணிக்கை பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.5.7 வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு

வாகனங்களுக்காக எரிபொருள் விநியோகிக்கும் போது ஓட்ட அட்டவணையின் பிரகாரம் எரிபொருள் சமப்படுத்தப்பட்டு அதன் பிரகாரம் தேவையான எரிபொருள் அளவு தீர்மானிக்கப்பட்டு எரிபொருள் கட்டளை சிபார்சு செய்யப்பட வேண்டிய போதிலும் சபையின் 6 வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாத காலப்பகுதிக்காகவும் எரிபொருள் கட்டளை சிபார்சு செய்யப்பட்டு ரூபா 703,153 கூட்டுத்தொகையான எரிபொருள் விநியோகிக்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.5.8 பாதீட்டுக் கட்டுப்பாடு

(i) 2012 ஆம் ஆண்டிற்காக 304-4 வீதிகள் மற்றும் பாலங்களின் கீழ் அதற்கான பிரேரணைகள் பெறப்பட்டு திட்டத்தைத் தயாரிக்காமல் ரூபா 2,080,000 தொகையானது பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டின் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 2,280,000 தொகையும், 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 2,615,000 தொகையும் பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான அபிவிருத்தித்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 08 செலவின விடயங்களில் 11% தொடக்கம் 69% வரையிலான வீச்சில் சாதகமான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் 02 வருமான விடயங்களில் 32% தொடக்கம் 43% வரையிலான வீச்சில் பாதகமான முரண்களும் வெளிப்படுத்தப்பட்டது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டைத் தயாரித்தல்
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்